# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
# பழநி

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், பழநி வட்டம், பழநி நகர் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் முதலுதவி சிகிச்சை மையங்களில் காலியாக உள்ள இரண்டு மருத்துவர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் (On Contract Basis) நிரப்ப கீழ்கண்ட கல்வி தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை முழு விவரங்களுடன் சரியாக பூர்த்தி செய்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ **14.11.2021**ம் தேதி பிற்பகல் **5.45** மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் பெறப்படும் வகையில் அனுப்பப்படவேண்டும். இத்தேதிக்கு பின்னிட்டு வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

இணை ஆணையர்/செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஒப்பந்த ஊதியம் (Consolidated Payment) மாதம் ஒன்றுக்கு | காலியிடம் | வயது | கல்வி தகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் (Medical Officer) | ரூ.90,000/- (Municipalities Corporation) | 2 | 35 வயது வரை | M.B.B.S (Qualified) Registered Under TNMSE |

விண்ணப்பபடிவங்கள் மற்றும் நிபந்தனைகள் திருக்கோயிலின் கீழ்கண்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இணையதள முகவரி – **www.palanimurugan.hrce.tn.gov.in , www.hrce.tn.gov.in**

செமதொஇ/905/வரைகலை/2021

**இணை ஆணையர்/செயல் அலுவலர்**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## ஒப்பந்த வேலை வாய்ப்பு விண்ணப்பம் (Consalidated Employement)

விண்ணப்பதாரரின்
புகைப்படம்
சான்றொப்பத்துடன்

1. பதவியின் பெயர் :

2. பெயர் :

3. தந்தையின் பெயர் :

4. நிரந்தர முகவரி :

5. மதம் (சாதி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :

6. பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :

7. கல்வி தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :

8. மருத்துவமனைகளில் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :

9. நன்னடத்தை சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) :

10. பொதுவானவை :

மேலே கூறப்பட்ட வரிசை எண். 01 முதல் 10 வரையிலான விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், நான் இந்து மதத்தை சார்ந்தவன் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**நாள்.-**

**இடம்.-** விண்ணப்பதாரரின் கையொப்பம்

## நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரருக்கு ஜீலை மாதம் முதல் தேதியன்று 35 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. உடல் ஆரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.
4. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள். அரசு பணியில் இருந்தும், பொது ஸ்தாபனத்தில் இருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள். இத்திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
5. நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயர் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று நகலினை விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.
6. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் 14.11.2021ம் தேதி மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.
7. விண்ணப்பதாரர் மருத்துவ அலுவலர் பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதிச் சான்றுகள் விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
9. வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்விற்கு அழைப்பு அனுப்பப்படும்.
10. நேர்முக தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரருக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
11. நேர்முக தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் நபரை /நபர்களை எவ்வித காரணங்களும் கூறாது நிராகரிக்க, திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
12. தேர்வு செய்யப்படும் நபர் சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு பின்பே பணி ஆணை வழங்கப்படும்.
13. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்து சான்றிதழ்களும் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்ப கூடாது.
14. அசல் சான்றிதழ்கள் அனைத்தும் நேர்முக தேர்விற்கு அழைக்கும் போது எடுத்து வர வேண்டும்.
15. விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரர்கள் புகைப்படம் ஒட்டப்பட்டு அதில் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் மேலொப்பம் பெறப்பட வேண்டும்.
16. விண்ணப்ப படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் திருக்கோயிலின் கீழ்கண்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி – palanimurugan.hrce.tn.gov.in

(ஒம்)நா.நடராஜன்

இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளர்